MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# இலக்கியங்கள் சுட்டும் வானியலறிவு

**திருமதி. இர.கிருஷ்ணவேணி**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம்**
**மகளிர் கல்லூரி. (தன்னாட்சி) ,சிவகாசி.**
Krishnaveni-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.17079046.

**Abstract :**

The one who lives by regulating life and life cycles is considered to be the one who excels in civilization and culture. In this way, the Tamils excelled in civilization and culture long ago. This is also acknowledged by historians. The first grammar book of Tamil, Tolkappiyam, has formulated and compiled the grammar of Tamil life. Therefore, Tolkappiyam can be considered a pioneer in the knowledge of astronomy.

**Key Words :** Literature - Civilization - Astrology - Knowledge

**முன்னுரை :**

வாழ்வியலையும் வாழ்க்கைச் சுழல்களையும் ஒழுங்குபடுத்தி வாழ்பவனே நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து வளங்குபவனாக பார்க்கப்படுகிறான் . அவ்வகையில் தமிழர்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர் . இதனை வரலாற்று ஆய்வாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர் . தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியலின் இலக்கணத்தை வகுத்து , தொகுத்தளித்துள்ளது. எனவே வானியல் பற்றிய அறிவில் தொல்காப்பியம் முன்னோடி எனலாம்.

**அறிவியல் சொல்லாய்வு :**

அறிவியல் என்பது இயற்கை மற்றும் இயற்பியல் உலகத்தை புரிந்து கொள்வதற்காக ஆய்வு செய்யப்படும் ஒரு முறையாகும் . மேலும், இதனை ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பு எனலாம் . இது பரிசோதனைகள் , தரவு பகுப்பாய்வு மற்றும் தர்க்கரீதியான முடிவுகளைப் பயன்படுத்தி உண்மைகளை கண்டறிகிறது.

‘ Science ’ என்னும் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் அறிவியல் என்பதாகும் . சயின்ஸ் என்னும் சொல் ‘சைன்ட்யா’ என்னும் கிரேக்கச்சொல்லிருந்து பெறப்பட்டது . இதன் பொருள் யாதெனின் கற்றல் அல்லது அறிவு என்பதாகும்.

**வானியல் பற்றி தொல்காப்பியம் :**

தொல்காப்பியம் வானியல் என்ற சொல்லை நேரடியாக பயன்படுத்தவில்லையெனினும் வானியல் சார்ந்த கருத்துகளை அடிப்படையாக கொண்டு இலக்கணம் வகுத்தார் . இவ்விலக்கணத்தைப் பின்பற்றி இலக்கியங்களிலும் மக்கள் வாழ்க்கை முறையிலும் பின்பற்றப்பட்டது எனலாம். தொல்காப்பியம் நாள் , மாதம், பருவமாற்றங்கள் , நட்சத்திர நாள்,


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

சூரியன் ,சந்திரன் இயங்கும் கால அளவீடு போன்றவற்றை எடுத்துரைக்கிறது.

பகலின் ஆதாரமாக விளங்கி வெப்பம் தருபவன் சூரியன் , இரவின் ஒளியூற்று சந்திரன் ஆகிய இரண்டு கோள்களின் இயக்கத்தினைக் கொண்டு காலம் கணிக்கப்பட்டது.

**"காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல் என வருூஉம் "**

**(தொல்- கிள - 58)**

நட்சத்திரங்கள் மனிதர்களின் வாழ்க்கைநிலை , பருவநிலை , விழாக்கள், விவசாயம் , போர் முறை போன்றவற்றோடு தொடர்பு கொண்டிருந்தன. வானின் ஒளிப்பொருளை ஆய்ந்து நாள்மீன் எனவும் கோள்மீன் எனவும் பாகுபடுத்தியுள்ளார் தொலகாப்பியர்.

**"குடையும் வாளும் நாள்கோள் அன்றி "(தொல். புற - 11)**

பொருக்குச் செல்லும் முன் மக்கள் நன்றாக வாழ்தல் வேண்டி நல்ல நாளில் குடையையும் வாளையையும் புறவிடு தல் உண்டு . மேலும் தலைவன் தீய ராசிகளின் ஆட்சியின் போது தலைவியைப் பார்ப்பதை தவிர்த்துவிடுவான்.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை "**

**(தொல்.கள - 1079)**

இவ்வாறான சுட்டுக்களின் வழி தொல்காப்பியத்தின் வானியல்சார்ந்த அறிவு புலப்படுகிறது.

**சங்கஇலக்கியம் சுட்டும் வானியல் சிந்தனைகள் :**

சங்ககாலத் தமிழன் வானத்தையே தன்னுடைய வீட்டின் கூரையாக கொண்டு எண்ணி வாழ்ந்த விசலாத்தன்மையானவன் . வானத்தில் நிகழக்கூடிய நிகழ்வுகளையும் மாற்றங்களையும் கூர்ந்து கவனித்து கணித்தான் . இத்தன்மை உடையாதாலே கணியன் பூங்குன்றனார் ,கணிதமேதாவியார் , பக்குடுவை நன்கினியார்போன்ற புலவர்களின் பெயர்கள் மூலம் அறியலாம். கோள்களின் இயக்கங்கள் பற்றியும் கிரகங்களின் தன்மை குறித்தும் நட்சத்திரங்கள் பற்றியும் சங்கால மக்கள் அறிந்திருந்தனர்.

நிக்கோலஸின் ஞாயிறுமையக் கொள்கை அதாவது, சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் நீள்வட்டப்பாதையில் சுழல்கின்றன என்பதை அன்றே கணித்தனர் நம் சிறுபாணாற்றுப்படை புலவர் ,

**"வாள்நிற விசும்பிற் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு"** **(சிறுபாண் - (242-243)**

மேலும் , சூரியனில் ஏற்படும் அணுப்பிணைவு காரணமகவே வெப்பமும் ஒளியும் ஏற்படுவதை

**" வானம் மூழ்கிய வயங்கொளி நெடுஞ்சுடர்க்**
**கதிர் காய்ந் தெழுந்தகங் கனலி ஞாயிறு "** **(நற்-163-19-1)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என மொழிகிறது . நெபுளா என்பது மேகத்தைக் குறிக்கும் இலத்தின் மொழிச்சொல்லாகும் . நெபுளாவிலிருந்து நட்சத்திரங்கள் பிறக்கின்றன . அண்டவெளியின் வலியும் தூசியும் சேர்ந்தது . நெபுளாக்கள் எவ்வாறு தோன்றி அழியுமோ அதுபோலவே இந்த உலகமும் தோன்றி அழியும் . இதனை ,

**“தொன்மறை இயற்கையின் மதியோ**
**மரபிற்றாகப் பசும்பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட**
**விசும்பில் ஊழ் யூழுழ் செல்லக்**
**கருவளர் வாந்த்து இசையில் தோன்றி**
**உருவறி வாரா ஒன்றன் ஊழியும்**
**செந்நீர் சுடரிய ஊழியும் பனியொடு ”**(பரிபாடல் - 2:1 - 1:5 )

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

**காப்பியங்கள் சுட்டும் வானியல்** :

16-ஆம் நூற்றாண்டில் தான் கலீலியோ தொலைநோக்கியைக் கண்டறிந்தார் . அத்தொலைநோக்கியின் மூலம் கோள்களின் நிறம் குறித்தும் கோள்களின் இயக்கங்கள் குறித்தும் பலராலும் அறியப்பட்டது . அத்தொலைநோக்கி கொண்டு சனிக்கோளும் அதன் வளையங்களையும் கண்டறிந்தனர். ஆனால் பல நூற்றாண்டுக்கு முன்னரே சனிக்கோள் வனைந்து புகைந்து ,அதன் புகை அக்கோளை சுழ்ந்து அமைந்துள்ள நிலையினை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

“ கரியவன் புகையினும்
புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும் ”

(சிலம்பு - நாடுகாண்)

சூரியனின் வடக்கு தெற்கு நகர்வினை,

“மாசறு விசும்பின் வெய்யோன்
வடதிசை அயணம் முன்னி ”

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வின் காரணமாக பருவநிலை மாற்றங்களான முன்பனி , பின்பனி போன்ற காலங்கள் தோன்றும் தன்மையினை சீவக சிந்தாமணி மொழிகிறது.

இப்புவியானது சூரியனிலிருந்து சிதறிய அழற்பிளம்பு , இது சூரியனை நீள் வட்டப்பாதையில் சுழன்று சுற்றுகிறது . சுழற்சி விசையினால் உருண்டையானதால் உலகு , உலகம் ஆனது . அண்டவெளியில் தொங்குவதால் (ஞாலுவதால் ) ஞாலம் என்றும் பெயர் பெற்றது.

“ மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே ” (மணி.மே-11-95-96)

அணுக்களின் கட்டமைப்பினால் ஆனது இவ்வுலகம் என்பதை விளக்குகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

கம்பராமாயணத்தின் பல இடங்களில் வீண்மின் இயக்கம், நட்சத்திரங்களின் தோற்றம் , காலநிலை மற்றும் கிரகச்சுழற்சி போன்ற வானி யல் சார்ந்த சிந்தனைகள் காணக் கிடைக்கின்றன. இராமனின் பிறப்பை விவரிக்கும் பகுதியில் , சூரியன் மிதுன இராசியில் , சந்திரன் புனர்வசு நட்சத்திரத்தில் இருந்தாக குறிப்பிடுகிறார்.

"ஆயிடை பருவம் வந்தடைந்த எல்லையின்
மாயிரு மண்மகள் மகிழ்வின் ஓங்கிட
வேய் புனர்பூசமும் விண்ணு ளோர்களும்
தூய கற்கடகமும் எழுந் துள்ளவே "

இதன் மூலம் அக்கால மக்களின் ஜோதிட - வானியல் அறிவு வெளிப்படுகின்றது . மேலும் இராவணவதம் நிகழ்வதற்கு முன்னர் யுத்தகாண்டத்தில் , அகால கிரகணம் , விண்மீன் விழுதல் , சூரியன் ஒளிகுறைதல் போன்றன சுட்டப்படுகின்றன.

**பக்தி இலக்கியங்கள் சுட்டும் வானியல் அறிவு :**

இயற்கை அடிப்படையிலான அறிவைப் பெற்றவன் சங்ககாலத்தமிழன் இவ்வறிவுடன் ஜோதிடம் மற்றும் அறிவியல் கலப்பும் இடம்பெற்றுள்ள இலக்கியங்கள் சித்தர் இலக்கியம் ஆகும்.

அண்டங்கள் பேரண்டங்கள் இவற்றின் அளப்பறி ய நிலையினை எடுத்துரைப்பது மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆகும் . எண்ணிலடங்கா அண்டங்கள் இருப்பதும் அவற்றின் செயல்பாடுகளளை எடுத்துரைப்பது மாணிக்கவாசகரின் வானியல் அறிவினை விளக்குகிறது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில்பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன "

(திருவாசகம் 3.1-4)

மேலும் , " ஊழி ஏழான உருவ போற்றி " என்று தேவாரம் மொழிகிறது. உலகில் தோற்றம் கொண்ட அனைத்துப்பொருளுக்கும் அழிவு உண்டு . உலகமும் அழிவுக்குள்ளாகும்.இதனை இலக்கியங்கள் ஊழிக்காலம் என்றும் பிரளயக்காலம் என்றும் உரைக்கிறது . இதனை இன்றைய விஞ்ஞான உலகமும் ஏற்கிறது ,இயற்கையினைப் பாதுகாக்க வேண்டுமென விளம்புகிறது.

**நாட்டார் மரபுகளின் வானியல் அறிவு**

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஏட்டில் எழுதாக்கிளவி என்று அழைக்கப்படும் இவ்விலக்கியம் . மேலும் இம்மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை காணப்படும் சடங்குகளில் அறிவியல் முறைகள் காணக்கிடைக்கின்றன. இவர்களின் பண்பாட்டில் பிறந்த பழமொழிகளிலும் விடுகதைகளிலும் வானியலறிவு மிளிர்கின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

'தை பொறந்தா வழி பொறக்கும் ', 'ஆடி பட்டம் தேடி விதை ' , 'பரணியில் பொறந்தா தரணி ஆளும் '. வடக்கே கறுத்தால் மழை பெய்யும் - ஊருக்கெல்லாம் ஒரே வெளிச்சம் , உயரப்பறக்குது ஊர்க்குருவி என்பன போன்ற பழமொழிகள் மற்றும் விடுகதைகள் இதற்குச் சா ன்று பகர்கின்றன.

**நவீன இலக்கியங்களில் வானியலறிவு :**

சங்ககால புலவன் தொட்டு சமகால புலவன் வரை தமிழ் இலக்கியமெங்கும் அறிவியல் செய்திகள் விரவியுள்ளன . மனிதன் நிலவினிலே தங்கி விட்டால் என்னவாகும் என்பதை கவிஞர் வைரமுத்து,

“ நிலவில் மனிதன்
நிலை கொண்டு விட்டால்
நிலாவிலிருந்து
கிரணம் பொழியுமா?
செயற்கைக் கோள்களை
பூமி இயக்குமா?
இல்லை பூமியை
செயற்கைக் கோள்கள்
இயக்குமா? ” (கவி- வைரமுத்து- ஏ இரண்டாயிரமே)

என விவரிக்கிறார்.

**நிறைவுரை :**

தமிழ் இலக்கியம் இன்றைய அறிவியல் அறிவுக்கு அடித்தளமிட்டது எனலாம் . தொலைநோக்கி மற்றும் ஏ வுகணைகள் போன்றவை கண்டுபிடிப்புக்கு முன்னமே நம் தமிழன் கோள்களின் நிறம் குறித்தும் அதன் தன்மைக்குறித்தும் ஆராய்ந்துள்ளான் என்பது புலப்படுகிறது. சங்க காலம் தொடங்கி சமகாலம் வரையிலும் வானியல் பற்றிய பார்வை நம் மக்களிடையே தொண்டுத்தொட்டு வந்துள்ளது என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள் :**

1. தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை
2. சங்க இலக்கியம் - பாட்டும் தொகையும்
3. வைரமுத்து கவிதைகள் - டாக்டர் பொன்மணி வைரமுத்து.


http://Creativecommons.org//license/by/4.0/.